**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,**
**திருநெல்வேலி பிரிவு**
**மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான**
**மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் 2017 - 2018**
**<u>பத்திரிக்கை செய்தி</u>**

தமிழக அரசின் சார்பில் **2017–18–ம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான** மாவட்ட அளவிலான குழு, நீச்சல் மற்றும் தடகள விளையாட்டு போட்டிகள் ஆண்கள் பெண்களுக்கு தனித்தனியாக பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

**25.11.2017 மற்றும் 26.11.2017 கூடைப்பந்து, கையுந்து பந்து, வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி, டென்னிஸ், இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து**

**02.12.2017 மற்றும் 03.12.2017 தடகளம், நீச்சல் போட்டிகள் நடைபெறவுள்ளது.**

**<u>நீச்சல் போட்டி விபரம் :</u>**50 Mts., 100 Mts., 200 Mts., 400 Mts. Free Style, 50 M. Back Stroke, 50 Mts., Breast stroke, 50 Mts. Butterfly stroke and 200 Mts. Individual Medley

**<u>ஆண்களுக்கான தடகள போட்டி விபரம்:</u>**

100 Mts, 800 Mts, 5000 Mts, 110 Mts Hurdles, High Jump, Long Jump, Triple Jump, Shot put, Discus and Javelin Throw.

**<u>பெண்களுக்கான தடகள போட்டி விபரம்:</u>**

100 Mts, 400 Mts, 3000 Mts, 100 Mts Hurdles, High Jump, Long Jump, Triple Jump, Shot put, Discus and Javelin Throw.

**<u>விதிமுறைகள்</u>**

- போட்டியில் கலந்து கொள்பவர்கள் 31.12.2017 அன்று 21 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். (**01.01.1997அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் – இதற்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**
- சொந்த ( Native ) திருநெல்வேலி மாவட்டத்திற்காகவோ / திருநெல்வேலியில் பணிபுரியும் மாவட்டத்திற்காகவோ/ திருநெல்வேலி பள்ளி, கல்லூரியில் படிக்கும் மாவட்டத்திற்காகவோ / விளையாட அனுமதிக்கப்படுவார்கள் அதற்கான ஆதாரங்கள் போட்டியின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- தமிழகத்தில் ஐந்து வருடங்களுக்கு (மேற்கண்ட சான்றிதழ்களுடன்) மேல் வசிப்பவர்க்கான Nativity Certificate கண்டிப்பாக கொடுக்க வேண்டும்.
- தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வசித்து வருவதற்கான சான்றுகளான Ration Card / Voter ID / Driving Licence / School Mark Sheet / Transfer Certificate இவற்றில் ஏதாவது ஒன்றின் Original & Xerox கண்டிப்பாக கொண்டு வருதல் வேண்டும்.
- குழு விளையாட்டுக்களில் ஒரு பள்ளி / கல்லூரி / கிளப்/நிறுவனத்திலிருந்து ஒரு விளையாட்டிற்கு ஒரு அணி மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படும் அதே போன்று தடகள மற்றும் நீச்சல் போட்டியில் ஒருவர் ஒரு போட்டியில் (Event) மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

மாவட்ட அளவிலான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூ1000/-, இரண்டாம் பரிசு ரூ750/-, மூன்றாம் பரிசு ரூ.500/- ரொக்கபரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். போட்டியில் வெற்றி பெறும் வீரர்/ வீராங்கனைகள் மாநில போட்டிகளில் கலந்து கொள்வார்கள். மாநில போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் முதல் மூன்று இடங்களை பெறும் ஒவ்வொரு வீரர் / வீராங்கனைகளுக்கும் தலா ரூ1லட்சம், ரூ75,000/- மற்றும் 50,000/- ரொக்கப்பரிசு தமிழக அரசால் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 0462-2572632 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

இச்செய்தியினை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு ர.வீ.வீரபத்ரன் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஓம்/-
மவாட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி